


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 335 | 4 Pages | 1.7.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 335 | 4 பக்கங்கள் | 1.7.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்**

**செல்லாத்தீ வாழ்க்கை யவர்**

**விளக்கம்:** நோய் மிகுந்த உடம்புடன் வறுமையான தீய வாழ்க்கை உடையவர், முன்பு கொலை பல செய்து உயிர்களை உடம்புகளில் இருந்து நீக்கினவர் என்று அறிஞர் கூறுவர்.

## பள்ளிகளில் இந்தியை கட்டாயமாக்கும் அரசாணைகளை திரும்ப பெற்ற மராட்டிய மாநில அரசு




மும்பை, ஜூன் 30

மத்திய அரசின் மும்மொழிக் கொள்கை திட்டத்தின் மூலம், மராட்டிய மாநிலம் முழுவதும் உள்ள மராத்தி மற்றும் ஆங்கில வழிப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இந்தியை கட்டாய 3வது மொழியாக மாற்றப்படும் என மராட்டிய மாநிலஅரசுஅறிவித்தது.இதற்குநவநிர்மாண் சேனா கட்சித் தலைவர் ராஜ் தாக்கரே, காங்கிரஸ், உத்தவ் தாக்கரே சிவசேனா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்த நிலையில், பள்ளிகளில் இந்தியை கட்டாயமாக்கும் 2 அரசாணைகளை மராட்டிய மாநில அரசு திரும்ப பெற்றுள்ளது. இது குறித்து பேசிய மராட்டிய முதல்மந்திரி தேவேந்திர பட்னாவிஸ், பள்ளிகளில்மும்மொழிக்கொள்கையைஅமல்படுத்துவதுதொடர்பான பரிந்துரைகளை வழங்க கல்வியாளர்கள் குழு ஒன்று அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதனிடையே மராட்டிய அரசை கண்டித்து வரும் ஜூலை 5ந்தேதி உத்தவ் தாக்கரே சிவசேனா மற்றும் நவநிர்மாண் சேனா கட்சிகள் போராட்டம் நடத்த உள்ளதாக அறிவித்திருந்த நிலையில், அந்த போராட்டம் ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து உத்தவ் தாக்கரே சிவசேனா கட்சியின் தலைவர் சஞ்சய் ராவத் கூறுகையில், "அரசாணைகள் திரும்ப பெறப்பட்டது மராத்திய அமைப்புகளின் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி" என்று தெரிவித்தார்.

## மேற்கு வங்காளம்: சட்ட கல்லூரி மாணவி பலாத்கார வழக்கு; நீதி கோரி பா.ஜ.க. மகளிரணி பேரணி



கொல்கத்தா, ஜூன் 30

மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா நகரில் உள்ள தெற்கு கொல்கத்தா சட்ட கல்லூரியை சேர்ந்த மாணவி (வயது 24) ஒருவர், கல்லூரி வளாகத்தில் ஆளுங்கட்சி அரசியல் பிரமுகர் ஒருவர் மற்றும் 2 மாணவர்களால் மிரட்டி பலாத்காரம் செய்யப்பட்டு உள்ளார். கடந்த ஆண்டு ஆர்.ஜி. கர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பயிற்சி மாணவி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, கொடூர கொலை செய்யப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்நிலையில், சட்ட கல்லூரியில் மாணவி பலாத்கார சம்பவம் நடந்துள்ளது.

கல்லூரியின் முன்னாள் மாணவரான அந்நபருடன் சேர்ந்து மற்ற 2 பேரும் பலாத்காரத்தில் ஈடுபட்டு உள்ளனர். இரவு 7.30 மணியில் இருந்து 10.50 மணி வரை 4 மணிநேரத்திற்கும் கூடுதலாக கல்லூரியில் பலாத்கார சம்பவம் நடந்துள்ளது. அப்போது, அந்த மாணவியை ஆக்கி மட்டையால் அடித்தும், பலாத்கார சம்பவம் தொடர்பான வீடியோவை மொபைல் போனில் எடுத்தும், அதனை ஆன்லைனில் வெளியிட்டு விடுவோம் என 3 பேரும் அச்சுறுத்தியும் மற்றும் கொலை மிரட்டலும் விடுத்துள்ளனர் என அந்த மாணவி புகாரில் கூறியுள்ளார். இதனை தொடர்ந்து, அந்த குற்றம் சாட்டப்பட்ட 3 நபர்களின் மொபைல்போன்கள்கைப்பற்றப்பட்டு, அவற்றைதடய அறிவியல் ஆய்வுக்கு கொண்டு சென்றிருக்கிறோம் என போலீசார் தெரிவித்தனர். இந்த சம்பவத்தில் முக்கிய குற்றவாளியாக கூறப்படும் மனோஜித் மிஷ்ரா என்பவர் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராவார். அக்கட்சியின் மாணவரணியின் செயலாளராகவும் உள்ளார். அவருடன் அக்கட்சியை சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர் ஜைப் அகமது (வயது 19) மற்றும் மற்றொரு மாணவர் பிரமீத் முகர்ஜி (வயது 20) ஆகிய இருவரும் மாணவியை பலாத்காரம் செய்து காயப்படுத்தி உள்ளனர் என புகாரில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அவர்கள் 3 பேரும் கைது செய்யப்பட்டு, கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு 4 நாட்கள் போலீஸ் காவல் விதித்து கோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது. இந்த வழக்கில், கல்லூரியின் பாதுகாவலரான பினாகி பானர்ஜி (வயது 55) என்பவரையும் போலீசார் கைது செய்துள்ளனர்.

பலாத்கார சம்பவம் நடைபெறுவதற்கு முன்பு, இதே சட்ட கல்லூரி வளாகத்தில் ஆளும் கட்சியின் கூட்டம் ஒன்றும் நடந்துள்ளது என்று கூறப்படுகிறது. அந்த மாணவி தப்ப முயன்றபோது, ஆக்கி மட்டையில் அடித்துள்ளனர். நீதி வேண்டும் என புகாரில் அவர் தெரிவித்து உள்ளார். இந்த சம்பவம் தொடர்ச்சியாக, ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பா.ஜ.க.வினர் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர். சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு போயுள்ளது என குற்றச்சாட்டு கூறி வருகின்றனர்.

இந்நிலையில், சிலிகுரி நகரில் பா.ஜ.க.வின் மகளிரணியை சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் இரவில், மஷால் மார்ச் என்ற பெயரில், நீதி கோரி பேரணியாக சென்றனர். அப்போது அவர்கள் நீதி வேண்டும் என வலியுறுத்தி தீப்பந்தம் ஏந்தியபடியும், கோஷம் எழுப்பியபடியும் சென்றனர்.

## மும்பை விமான நிலையத்தில் ரூ.5.11 கோடி கஞ்சா பறிமுதல்




மும்பை, ஜூன் 30

மும்பை விமான நிலையத்தில் கஞ்சா கடத்தல் குறித்து சுங்கத்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் மும்பை விமான நிலைய பயணிகளிடம் அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இந்த நிலையில் தாய்லாந்து தலைநகர் பாங்காக்கிலிருந்து இந்தியர் ஒருவர், இண்டிகோ விமானத்தில் கடந்த ஜூன் 27ம் தேதி அன்று மும்பை விமான நிலையத்திற்கு வந்தடைந்தார். அப்போது அவர், கொண்டுவந்த உடைமைகளில் மறைத்து வைத்திருந்த ரூ.5.11 கோடி மதிப்புள்ள (5.119 கிலோ) உயர் ரக கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

இந்த உயர் ரக கஞ்சாவை கடத்தி வந்த நபரை அதிகாரிகள் கைது செய்தனர். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னையில் 120 மின்சார பஸ்கள் சேவை தொடக்கம்: என்னென்ன வசதிகள் உள்ளன?

சென்னை, ஜூலை 1

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகமானது எரிபொருள் செலவை கட்டுப்படுத்தும் வகையிலும், சென்னையில் காற்று மாசுபாட்டை கணிசமாக குறைக்கும் வகையிலும், பயணிகளுக்கு கூடுதல் வசதி வழங்கும் வகையிலும் தாழ்தள மின்சார பஸ்களை இயக்க முடிவு செய்துள்ளது. அதன்படி உலக வங்கி உதவியுடன் மொத்த விலை ஒப்பந்தத்தின்படி (ஜி.சி.சி.) ஆயிரத்து 225 மின்சார தாழ்தள பஸ்களை வாங்க முடிவு செய்யப்பட்டது.

அதில் முதல்கட்டமாக 625 மின்சார பஸ்களுக்கான ஒப்பந்தமானது அசோக் லேலண்ட் நிறுவனத்தின் துணை நிறுவனமான 'ஓம் குளோபல் மொபிலிட்டி' நிறுவனத்துடன் போடப்பட்டு உள்ளது. இதில் 400 பஸ்கள் ஏ.சி. அல்லாத பஸ்களும், 225 ஏ.சி. பஸ்களும் அடங்கும். இந்த மின்சார பஸ்களை இயக்குவது மற்றும் பாராமரிப்பது 'ஓம் குளோபல் மொபிலிட்டி' நிறுவனம்தான்.

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் சார்பில் கண்டக்டர்கள் பணியமர்த்தப்பட்டு டிக்கெட் விற்பனை



மேற்கொள்ளப்பட்டு வருவாய் ஈட்டப்படும். இந்த 625 தாழ்தள மின்சார பஸ்களில் முதல் கட்டமாக 120 மின்சார பஸ்களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (திங்கட்கிழமை) காலை 10.30 மணியளவில் சென்னை வியாசர்பாடி பணிமனையில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தார்.

பேருந்தில் உள்ள வசதிகள்:

மின்சார பஸ்களில் ஏராளமான வசதிகள் உள்ளன. அதாவது, இந்த மின்சார பஸ்கள் ஆட்டோ கியர் சிஸ்டம் என்பதால் 'கிளச்' மிதிக்க வேண்டிய அவசியம் டிரைவர்களுக்கு இல்லை. மேலும் இந்த பஸ்கள் டீசல், சி.என்.ஜி. பஸ்களை போன்று அதிகளவில் வெப்பத்தை உமிழ்வதில்லை. இது தவிர பஸ்சின் உயரத்தை கூட்டி குறைக்கும் வசதி உள்ளது. அதாவது, மழைக்காலங்களிலோ அல்லது மிகவும் உயரமான வேகைத் தடைகளின் போதோ அல்லது அதிகளவில் பயணிகள் ஏறிய நிலையில் பஸ் தாழ்ந்து காணப்பட்டாலோ பஸ்சின் உயரத்தை அதிகரிக்கும் வகையிலான வசதி உள்ளது.

இது போக இந்த பஸ்களில் பாதுகாப்பு கருதி 7 சி.சி.டி.வி. கண்காணிப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகள்சிரமமின்றி ஏறி இறங்கும் வகையிலான வசதி மற்றும் அவர்களுக்காக பிரத்யேகமாக இருக்கைகள் அமைக்கப்பட்டு உள்ளன. எதிர் எதிரே அமர்ந்து செல்லும் வகையில் இருக்கைகள், 'லக்கேஜ்' வைப்பதற்கான சிறப்பு இடம்,

அடுத்த பஸ் நிறுத்தம் குறித்த அறிவிப்புகள் வெளியிடுவதற்கான ஒலி பெருக்கிகள், அவசரகாலங்களில் அலாரத்தை பயன்படுத்துவதற்கான பொத்தான்கள்.

ஒவ்வொரு இருக்கையின் கீழும் 'சீட் பெல்டு'கள். மேலும், இருக்கையின் கீழ் செல்போன்களை சார்ஜ் போடுவதற்கான 'சார்ஜிங் பாயிண்டு'கள். அதிகளவில் வெப்பம் வெளியிடாத வகையிலான எல்.இ.டி. பல்புகள், டிரைவர் இருக்கையின் மேலே மின்விசிறிகள், தீயணைப்பு கருவிகள், முதலுதவி பெட்டிகள் என ஏராளமான வசதிகள் இந்த மின்சார பஸ்களில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஊடக கனி நல சங்கத்தின் மாதாந்திர கூட்டம்





திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஊடக கனி நல சங்கத்தின் மாதாந்திர கூட்டம் சுமார் 11 மணி அளவில் திருப்பூர் மாவட்ட தலைவர் த. லாரன்ஸ் தலைமையில் நடைபெற்றது சங்கத்தில் உள்ள பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டார்கள் மாவட்ட செயலாளர் V. முத்துப்பாண்டி அவர்கள் பல கருத்துக்களை முன் வைத்தார்கள் அதற்கு ஒவ்வொரு பொறுப்பாளர்களும் பதில் உரையாற்றினார்கள் இனிவரும் கூட்டங்களில் எந்த பொறுப்பாளர்களும் உறுப்பினர்களும் காரணம் சொல்லக்கூடாது ஒவ்வொருவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் பல கருத்துக்கள் பேசப்பட்டது இறுதியில் மாநிலத் தலைவன் திரு கனிராஜ் அவர்கள் வீடியோ கால் மூலமாக சில அறிவுரைகள் கூறினார்கள் கூட்டம் சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்றது அதன் பிறகு மாவட்ட துணைத் செயலாளர் R .கார்த்திகேயன் அவர்கள் நன்றி கூறி புன்னகையுடன் கூட்டம் முடிக்கப்பட்டது


## காங்கேயம் தொழில்நுட்பக் கல்லூரியின் 14வது பட்டமளிப்பு விழா

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகேயுள்ள காங்கேயம் தொழில்நுட்பக் கல்லூரியின் 14வது பட்டமளிப்பு விழா. இன்று கல்லூரியின தீரன் சின்னமலை கலையரங்கத்தில் நடைபெற்றது.விழாவுக்கு கல்லூரி தாளாளர் எஸ். ஆனந்தவடிவேல் தலைமை தாங்கினார்.காங்கேயம் கல்வி குழுமம் தலைவர் என்.ராமலிங்கம், செயலாளர் சி. கே. வெங்கடாசலம், பொருளாளர் சி. கே. பாலசுப்ரமணியம், பொருளாளர். தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர். ஆர். வி. மகேந்திர கௌடா, ஆராய்ச்சி மற்றும் தொழில் இணைப்பு இயக்குனர். டாக்டர். பி. தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ். ராம்குமார் வரவேற்புரை வழங்கினார்.அப்போது கடந்த ஆண்டு கல்லூரி படைத்தசாதனைகள்மற்றும்செயல்பாடுகளை விளக்கும் விரிவான அறிக்கையை வெளியிட்டார். கல்வித் தரம், வேலைவாய்ப்பு முயற்சிகள் மற்றும் ஆராய்ச்சி முன்னேற்றங்கள் குறித்து அவர்உரையில்குறிப்பிடப்பட்டார்.தொடர்ந்து




சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ராயல் என்ஃபில்டு நிறுவனத்தின் தொழில்நுட்ப நிபுணர் கணேஷ் நாகராஜன் மாணவமாணவிகளுக்கு பட்டமளிப்பு வழங்கி உரையாற்றினார். அப்போது இன்ஜினியரிங் கல்வியின் உண்மையான மதிப்பைக் குறித்து அவர் தெளிவாக எடுத்துரைத்தார்.

இளைஞர்கள் புதிய கண்டுபிடிப்புகள், நேர்மை மற்றும் சமூக பொறுப்பை ஏற்று முன்னேற வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். பட்டம் பெறும் மாணவர்களுக்கு சமூகத்தில் அர்த்தமுள்ள பங்களிப்பு செய்யவும், தொழில்நற்பெயரைநிலைநாட்டவும்அவர் ஊக்கமளித்தார். பின்னர், பல்துறை தலைவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தின் தேர்வுகளில் தகுதிபெற்று பட்டம் பெறும் மாணவர்களின் பெயர்களை அறிவித்தனர். முதல்வர் பட்டம் பெறும் மாணவர்களிடம் தொழில் ஒப்பந்த உறுதிமொழியை எடுத்துக்கொடுத்தார். தொழில்முறை பொறுப்புகளை நேர்மையாக மேற்கொள்ளவும். கல்லூரியின் பெயர் பெருமை ஏற்றவும், தங்கள் தொழிலின் மரியாதையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கவும் அவர் கேட்டுக் கொண்டார். இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்கள், பெற்றோர்கள், பேராசிரியர்கள் மற்றும் பட்டம் பெறும் மாணவ மாணவிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




## மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரி தாராபுரம் முதலாம் ஆண்டு தொடக்க விழா

மகாராணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு சேர்ந்துள்ள மாணவிகளுக்கான தொடக்கக் கல்லூரி கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது இவ்விழாவை கல்லூரி தலைவர் திரு வி கோவிந்தராஜ் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார் கல்லூரி முதல்வர் முனைவர் சு தமிழ்ச்செல்வி வரவேற்புரை நிகழ்த்தினார் கல்லூரி செயலாளர் என் ஏ ஹெச் சுலைமான் அவர்கள் தலைமை உரையாற்றினார் இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு ஆ பெலிக்ஸ்ராஜாஅவர்கள்கலந்துகொண்டு இந்த கல்லூரி காலத்தை சரியாக பயன்படுத்தி கல்வி தனித்திறன் போன்றவற்றை மேம்படுத்திக் கொண்டு நல்ல வேலைவாய்ப்பை பெற்று தன் சமூகத்திற்கும் நம்




நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் வகையில் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்று சிறப்புரையாற்றினார்

இந்நிகழ்ச்சியில் கல்லூரி பொருளாளர் கே சுப்பிரமணியம் துணைத்தலைவர் திரு எம் ஆர் தமிழரசன் இணைச்செயலாளர் ஜி எஸ் ராஜுதீன் இயக்குனர்கள் என்ஏ ஹெச் அப்துல் ரகுமான் ஏ முகமது அப்துல் காதர் கல்வியில் கல்லூரி முதல்வர் முனைவர் கே மாரிஸ் செவிலியர் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ் தமிழ்ச்செல்வி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் கல்லூரியில் வேலை ரய்ப்புக்கு தேவையான உதவிகளையும் வழிகாட்டுதலையும் வழங்கும் வகையில் இன்குபேஷன் சென்டர் என்ற தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் க்யூப் ஏ ஐ சொலுஷன் என்ற நிறுவனத்தோடு கையெழுத்திடப்பட்டது கல்லூரியில் சேர்ந்த மாணவியர்களின் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது நிறைவாக தமிழ் துறை தலைவர் தி ரவிக்குமார் நன்றி கூறினார்

# எல்லை தாண்டி மீன் பிடித்ததாக தமிழக மீனவர்கள் 8 பேர் இலங்கை கடற்படையால் கைது



ராமேஸ்வரம், ஜூலை 1

கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி அவ்வப்போது இலங்கை கடற்படை கைது செய்து வருகிறது. மீன் பிடி தடைக்காலம் கடந்த சில தினங்களுக்கு முன்புதான் முடிந்து மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன் பிடிக்க செல்லும் நிலையில், இலங்கை கடற்படையின் அட்டுழியம் மீண்டும் தொடங்கியுள்ளது. மீன் பிடித்துவிட்டு கரைக்கு திரும்பிகொண்டு இருந்த போது ராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் 8 பேரை ஒரு படகுடன் இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்களை தலைமன்னார் கடற்படை முகாமிற்கு விசாரணைக்காக இலங்கை கடற்படை அழைத்து சென்றது. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளது மீனவர்களிடையே அதிர்ச்சியைஏற்படுத்தியுள்ளது.

# கூட்டணி குறித்து எடப்பாடி பழனிசாமி தான் தெளிவுபடுத்த வேண்டும்திருமாவளவன் பேட்டி



குன்னம், ஜூலை 1

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் அருகே நடந்த தனியார் வேலை வாய்ப்பு முகாமில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் எம்.பி. கலந்து கொண்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

கூட்டணி குறித்து எடப்பாடி பழனிசாமி இது வரை எதுவும் தெரிவிக்கவில்லை. கூட்டணி குறித்து மத்திய மந்திரி அமித்ஷா மட்டுமே திரும்பத் திரும்ப சொல்லி வருகிறார். இந்தியா கூட்டணியில் தமிழகத்தை பொறுத்தவரை தி.மு.க. தலைமையில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியாக உள்ளது. அதேபோல் அ.தி.மு.க. தலைமையில் கூட்டணி உள்ளதா? இல்லையா? என்ற கேள்வி எழுகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணி தான் அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியா அல்லது அ.தி.மு.க. தலைமையில் தமிழ்நாட்டில் தனி கூட்டணியா என்ற தெளிவும் தேவைப்படுகிறது. ஆகவே கூட்டணி தொடர்பாகவும், கூட்டணி ஆட்சி தொடர்பாகவும் எடப்பாடி பழனிசாமி தான் தெளிவுபடுத்த வேண்டும். பா.ம.க. தலைவர் ராமதாஸ், காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை சந்திப்பு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. இது கூட்டணி தொடர்பான சந்திப்பா என்றும் தெரியாது. யூகத்தின் அடிப்படையில் ஒரு கருத்தை சொல்ல முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# வீட்டோடு மாப்பிள்ளை.. மரியாதை கிடைக்கவில்லை என்ற ஆத்திரத்தில் கணவர் செய்த கொடூர செயல்



கருங்கல், ஜூலை 1

குமரி மாவட்டம் கருங்கல் அருகே பாலப்பள்ளம்படுவூர்காட்டுவிளை பகுதியை சேர்ந்தவர் டார்வின் (வயது 46). தொழிலாளியான இவருடைய மனைவி பபிதா நித்ய செல்வி (39). இவர்களுக்கு 9 வயதில் பென்குரூஸ் என்ற மகனும், 7 வயதில் டிக்ஸ்மெரின் என்ற மகனும் உள்ளனர். கழுவன்திட்டை பகுதியில் உள்ள மனவளர்ச்சி குன்றிய பள்ளியில் தங்கியபடி பென்குரூஸ் படித்து வந்தான்.

இந்தநிலையில் டிக்ஸ்மெரின் தன்னுடைய பாட்டி வீட்டுக்கு சென்று தங்கியுள்ளான். இதனால் டார்வினும், பபிதா நித்ய செல்வி ஆகிய இருவர் மட்டும் வீட்டில் இருந்துள்ளனர்.

டார்வின்வீடு பூட்டியே கிடந்துள்ளது. இரவான நிலையிலும் விளக்கு எதுவும் அந்த வீட்டில் எரியவில்லை. இதனால் அக்கம் பக்கத்தினருக்கு சந்தேகம் ஏற்பட்டு வீட்டுக்கு சென்றுள்ளனர். அங்கு அவர்கள் கண்ட காட்சி அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பபிதா நித்ய செல்வி கொல்லப்பட்ட நிலையில் பிணமாக கிடந்துள்ளார். கணவர் டார்வின் ஒருவித பதற்றத்துடன் இருந்துள்ளார். இதுபற்றி கருங்கல் போலீசாருக்கு அக்கம்பக்கத்தினர்தகவல் கொடுத்தனர். உடனே போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

இதனை தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் டார்வினை பிடித்து போலீசார் விசாரித்த போது, மனைவியை அவரே கொன்று விட்டு மாலை வரைபிணத்துடன் வீட்டிலேயே பதுங்கியிருந்தது தெரியவந்தது.

அதிகாலையில் கணவன், மனைவி இடையே திடீரென தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த டார்வின், பபிதா நித்ய செல்வியை கழுத்தை நெரித்தும், துணியால் கழுத்தை இறுக்கியும் கொன்றுள்ளார். ஆத்திரத்தில் மனைவியை கொன்று விட்டோமே, இனி வெளியே சென்றால் போலீசார் பிடித்து விடுவார்களே என்ற அச்சம் டார்வினுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் வீட்டுக்குள்ளேயே மனைவி பிணத்துடன் காலையில் இருந்து மாலை வரை இருந்துள்ளார். அந்த சமயத்தில் பித்துபிடித்ததைபோன்று அங்குமிங்குமாக நடந்துள்ளார். கொலையை மறைத்து விடலாமா? என்ற எண்ண ஓட்டமும் அவருக்கு தோன்றியது.

இதனால் இரவு நேரத்தில் மனைவி உடலை எடுத்துச் சென்று மறைவான பகுதியில் வீசி விடலாம் என்ற எண்ணத்தில் புலம்பியிருக்கலாம் என தெரிகிறது.

ஆனால் இரவானதும் வீட்டில் விளக்கு போடாததால் சந்தேகப்பட்டு பொதுமக்கள் வந்ததால், டார்வின், மனைவியை கொன்ற சம்பவம் வெட்ட வெளிச்சத்துக்கு வந்தது. மேலும் கொலையை மறைக்க டார்வின்தீட்டிய திட்டம் முறியடிக்கப்பட்டிருக்கலாம் என போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது.

இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்து டார்வினை போலீசார் கைது செய்தனர். அதே சமயத்தில் மனைவியை கொன்றது ஏன்? கொன்ற பிறகு உடலுடன் வீட்டில் பதுங்கியது ஏன்? என்பது தொடர்பாக எழுந்த கேள்விக்கான விடையை அறிந்து கொள்ள போலீசார் டார்வினின் வாக்குமூலத்தை பெற தீவிரமாக விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் வீட்டோடு மாப்பிள்ளையாக இருந்ததால் மரியாதை கிடைக்கவில்லை என்ற ஆத்திரத்தில் மனைவியை கொன்றதாக டார்வின் போலீசாரிடம் வாக்குமூலம்அளித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மனைவியை கொன்ற கணவர், உடலுடன் நாள் முழுவதும் வீட்டில் இருந்த சம்பவம் குமரியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அசோக் நகர் வாலிபர் கொலை வழக்கு: தலைமறைவாக இருந்த மாமியார் கைது



சென்னை, ஜூலை 1

சென்னை அசோக்நகர் 7வது அவென்யூவை சேர்ந்தவர் கலையரசன் (வயது 23). இவர் அசோக் நகர்புதூர் 13வது தெருவை சேர்ந்த தமிழரசி என்ற பெண்ணை காதலித்து திருமணம் செய்தார். இவர்களுக்கு 3 வயதில் குழந்தை உள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டாக கருத்து வேறுபாட்டால் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர்.

னினும் குடும்ப பிரச்சினை புகைந்து கொண்டே இருந்துள்ளது. கலையரசன் கடந்த ஆண்டு தமிழரசியின் சகோதரர் சக்திவேலை (20) தாக்கியுள்ளார். இதனால் கலையரசனை பழிதீர்க்க மற்றொரு சகோதரர் சஞ்சய் (18) திட்டம் போட்டு காத்திருந்தார். இதற்கிடையே காயமடைந்த சக்திவேல் சிகிச்சைக்கு பின்னர் குணமடைந்தார்.

இந்த நிலையில் கலையரசன் கடந்த 15ந்தேதி அன்று அசோக்நகர் புதூர் 8வது தெரு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவரை சஞ்சய், சக்திவேல் மற்றும் அவரது நண்பர் சுனில்குமார் (20) ஆகிய 3 பேரும் வழிமறித்து சரமாரியாக அரிவாளால் வெட்டிவிட்டு தப்பினர். இதில் காயமடைந்த கலையரசன் உயிருக்கு ஆபத்தான நிலையில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். இந்த சம்பவம் குறித்து அசோக்நகர் போலீசார் கொலைமுயற்சி வழக்கின் கீழ் சஞ்சய், சக்திவேல், சுனில்குமார் ஆகிய 3 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கலையரசன் உயிரிழந்தார். இதையடுத்து கைதான 3 பேர் மீது கொலைவழக்கு பாய்ந்தது.

இந்தவழக்கில்கொலை செய்யப்பட்ட கலையரசனின் தாயார் உள்ளிட்ட உறவினர்கள் இந்த படுகொலைக்கு பின்னணியில் தமிழரசியும், அவரது நண்பர் சரவணன் என்பவரும் மற்றும் தமிழரசியின் குடும்பத்தினரும் செயல்பட்டதாக குற்றம் சாட்டி அசோக்நகர் போலீசில் புகார் கொடுத்தனர். இது தொடர்பாகவும் அசோக் நகர் போலீசார் விசாரணை நடத்தினார்கள்.

போலீஸ் விசாரணையில் கலையரசன் கொலைக்கு சதித்திட்டம் தீட்டி பின்னணியில் இருந்து செயல்பட்டது தமிழரசியும், அவரது நண்பர் சரவணனும் என்பது தெரியவந்தது. அவர்கள் 2 பேரையும் போலீசார் விசாரணைக்கு அழைத்த போது தலைமறைவாகி விட்டனர். இந்தநிலையில் தமிழரசி கோர்ட்டில் சரண் அடைந்தார். அவரிடம் 4 நாட்கள் போலீஸ் காவலில் வைத்து விசாரணை நடந்தது.

அவரது தாயார் சந்தியா (65) என்பவரும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டு உள்ளதாகவும் அவரையும் தேடிவருவதாக போலீசார் தெரிவித்திருந்தனர். இந்த வழக்கில் சஞ்சய் என்ற இன்னொரு உறவினரும் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கலையரசன் கொலை வழக்கில் மனைவி தமிழரசி, மைத்துனர்கள் சஞ்சய், சக்திவேல், மற்றும் சுனில்குமார் ஆகியோர் ஏற்கனவே கைதானநிலையில் தலைமறைவாக இருந்த மாமியார் சந்தியாவும் தற்போது கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசோக்நகர் பகுதியில் இந்த கொலை சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஆதியோகி, தியானலிங்கத்தை இன்று தரிசனம் செய்ய அனுமதி இல்லை



கோயம்புத்தூர் ஜூலை 1

கோவை ஈஷா யோகா மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கோவை ஈஷா யோகா மையத்திற்கு தியானலிங்கம், லிங்க பைரவி மற்றும் ஆதியோகியை தரிசிப்பதற்காக தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் உலகம் முழுவதிலும் இருந்து வருகை தருகின்றனர்.

இந்நிலையில் வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்காக ஜூலை 1 ஆம் தேதி ஒரு நாள் மட்டும் ஆதியோகி, தியானலிங்கம் மற்றும் லிங்கபைரவி வளாகங்களில் பக்தர்களின்தரிசனத்திற்கு அனுமதி இல்லை. இடையூறுகளுக்கு வருந்துகிறோம். மேலும் ஜூலை 2 ஆம் தேதி முதல் வழக்கம் போல் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிறுவன் கடத்தல் விவகாரம்: ஜெகன்மூர்த்திக்கு நெருக்கமானவர்களிடம் விசாரணை



சென்னை, ஜூலை 1

திருவள்ளூர் மாவட்டம் களாம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த தனுஷ், தேனியைச் சேர்ந்த விஜயஸ்ரீ காதல் திருமண விவகாரத்தில் தனுஷின் சகோதரரை கடத்தியது தொடர்பாக புரட்சி பாரதம் கட்சி தலைவரும், கே.வி.குப்பம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான பூவைஜெகன்மூர்த்தியை போலீசார் தேடி வந்த நிலையில், அவர் முன்ஜாமீன் கோரி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, போலீஸ் விசாரணைக்கு ஆஜராகும்படி பூவை ஜெகன்மூர்த்திக்கு உத்தரவிட்டது. அதன்படி அவர் விசாரணைக்கு ஆஜரானார். இந்தநிலையில் ஜெகன்மூர்த்தியின் முன்ஜாமீன் மனு நீதிபதி ஜெயச்சந்திரன் முன்னிலையில் கடந்த 27ந்தேதி அன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது முன்ஜாமீன் மனுவை நீதிபதி தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். முன்ஜாமீன் மனு தள்ளுபடியானதால் ஜெகன்மூர்த்தியை கைது செய்வதற்கு சி.பி.சி.ஐ.டி. போலீசார் நடவடிக்கை எடுத்த நிலையில் அவர் தலைமறைவாகி உள்ளார். அவரை சி.பி.சி.ஐ.டி. துணை சூப்பிரண்டு வேல்முருகன் தலைமையில் ஒரு தனிப்படை போலீசார், 3 இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் 3 தனிப்படை போலீசாரும் தீவிரமாக தேடி வருகிறார்கள். மேலும் இந்த வழக்கில் கூடுதல் டி.ஜி.பி. ஜெயராமுக்கு சம்மன் அனுப்பி அவரிடம் விரைவில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணையை தொடங்க உள்ளனர்.

இந்நிலையில் சிறுவன் கடத்தல் விவகாரத்தில் புரட்சி பாரதம் கட்சி தலைவர் ஜெகன்மூர்த்திக்கு நெருக்கமானவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

# திருப்புவனம் இளைஞர் உயிரிழப்பு: லாக்அப் மரணமோ என்ற சந்தேகம் எழுகிறது..? நயினார் நாகேந்திரன்



சென்னை, ஜூலை 1

பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பகுதியில் காவல்துறை விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்ட இளைஞர் உயிரிழந்ததாக தெரிவித்திருப்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. மடப்புரம் அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோவிலின் தற்காலிக ஊழியர் அஜித்குமாரை விசாரணை எனும் போர்வையில் அழைத்துச்சென்று, 7 காவலர்கள் இணைந்து 2 நாட்களாக அடித்துத் துன்புறுத்தியதால் அவர் உயிரிழந்ததாக உறவினர் குற்றஞ்சாட்டி வரும் நிலையில், இது லாக்அப் மரணமோ என்ற சந்தேகத்தை வலுவாக எழுப்புகிறது.

கடந்த வாரம் பாலியல் தொல்லை குறித்து புகாரளிக்க வந்த கர்ப்பிணி உட்பட மூன்று பெண்களை காவலர் தாக்கிய நிலையில், தற்போது தன்னையும் தன் சகோதரரையும் வண்டியில் அழைத்து செல்லும் வேளையிலும் பின்னால் கயிறு கட்டி தாக்கியதாக உயிரிழந்த அஜித்குமாரின் சகோதரர் வாக்குமூலம் அளித்திருப்பது காவல்துறையின் அதிகரித்துவரும் குரூரப் போக்கை வெளிப்படுத்துகிறது. திமுக ஆட்சியில் காவல்நிலையத்திற்கு வந்தாலே ஏழை எளியோரின் உயிர்களுக்கு பாதுகாப்பில்லை என்ற நிலை உருவாகி உள்ளது. காவல்துறையின் அராஜகப் போக்கிற்கு மேலும் பல உயிர்கள் பலியாகும் முன், சட்டம் ஒழுங்கை தன் நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், உடனடியாக இவ்விசயத்தில் தீவிர விசாரணை நடத்தி, உயிரிழந்தவரின் இறப்புக்கு தக்க நியாயம் பெற்றுத்தர வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜெயலலிதா படம் அவமதிப்பு கண்டனம் தெரிவித்த அதிமுக

சென்னை, ஜூலை 1

அதிமுக சார்பில் வெளியிடப்பட்டுள்ள எக்ஸ் வலைதளபதிவில் கூறியிருப்பதாவது:

மறைந்தும் மக்கள் உள்ளங்களில் வாழும் இதய தெய்வம் அம்மா அவர்களை அவமானப்படுத்திய ஸ்டாலின் அரசுக்கும், அமைச்சர் சக்கரபாணிக்கும் கடும் கண்டனம்.

மின்பகிர்மானகோட்ட அலுவலகத்தில் உள்ள அம்மா அவர்களின் புகைப்படங்களை குப்பைத் தொட்டியில் வீசினால்,

அம்மா அவர்களின் சாதனைகளை மறைத்து விட முடியுமா?

200611 திமுக ஆட்சியில் இருண்டிருந்த தமிழ் நாட்டை, ஒளிரூட்டியவர் அம்மா அவர்கள். மின்வெட்டு தமிழ் நாட்டை, மின்மிகை மாநிலமாக்கியவர்.

ஆட்சிக்கு வந்தது முதல் மின் கட்டண உயர்வை மட்டும்சரியாக செய்யும் இந்த ஸ்டாலின் மாடல் திமுக அரசின் அவமானச் செயலுக்கு, தமிழ்நாட்டு மக்களுடன் இணைந்து கழகப் பொதுச்செயலாளர் எடப்பாடி பழச்சாமி தலைமையிலான அஇஅதிமுக தக்க பதிலை 2026ல் தரும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்புவனம் இளைஞர் மரணம்: "நியாயம் கிடைக்கும் வரை விடப்போவதில்லை.." அண்ணாமலை தாக்கு



சென்னை, ஜூலை 1

முன்னாள் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல்நிலையத்தில், விசாரணைக்காகஅழைத்துச் செல்லப்பட்ட 29 வயது இளைஞர் அஜித், காவல்துறை விசாரணையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்தக் கொலையை மூடிமறைக்கும் வேலையில், காவல்துறையினரும், அந்தப் பகுதி திமுகவினரும் ஈடுபட்டிருப்பதாக தெரிகிறது.

பாலியல் குற்றங்களில் ஈடுபடும் திமுகவினர், போதைப் பொருள்கள் விற்பனை செய்யும் திமுகவினர் யாரும், காவல் துறை விசாரணையின்போது தாக்கப்படுவதில்லை. ராஜமரியாதையுடன் நடத்தப்படுகின்றனர். சிறுசிறுகுற்றங்களில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படும் அப்பாவிகளைக் காவல் துறை விசாரணை என்ற பெயரில் கடுமையாகத் தாக்குவது, திமுக ஆட்சியில் மிகவும் அதிகரித்துள்ளது. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, கடந்த 2022 ஆம் ஆண்டிலிருந்து, 23 பேர் காவல் துறை விசாரணை யின் போது மரணமடைந்துள்ளனர். ஆனால், காவல் துறைக்குப் பொறுப்பான முதல்அமைச்சர், இது குறித்து எந்தக் கவலையுமின்றி இருக்கிறார்.

தமிழகத்தில், ஆளுங் கட்சியினர், அமைச்சர்களின் நண்பர்கள் குற்றம் செய்தால், அவர்களைக் காப்பாற்ற, பாதிக்கப்பட்டவர்களையே மிரட்டும் திமுக அரசு, ஏழை எளிய மக்கள் என்றால், அவர்கள் உயிர் போனாலும் கண்டுகொள்ளாமல் இருக்கிறது. உடனடியாக, திருப்புவனம் இளைஞர் அஜித், காவல் துறை விசாரணையில் கொலை செய்யப்பட்டது குறித்து முழு விசாரணை நடத்த வேண்டும். இதில் தொடர்புடையவர்கள் அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காகப் போராடும் திருப்புவனம் மக்களோடு நாங்கள் துணை நிற்கிறோம். உயிரிழந்த இளைஞர் அஜித் குடும்பத்தினருக்கு நியாயம் கிடைக்கும் வரை நாங்கள் விடப்போவதில்லை. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீடுகளுக்கு மின் கட்டண உயர்வு இல்லை: அமைச்சர் சிவசங்கர் விளக்கம்



சென்னை, ஜூலை 1

வீடுகளுக்கான மின் கட்டண உயர்வு தற்போதைக்கு இல்லை என்று மின் துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். அனைத்து இலவச மின்சார சலுகைகளும் தொடரும் என்றும் அமைச்சர் சிவசங்கர் விளக்கமளித்துள்ளார்.

இதுதொடர்பாகவெளியிட்டுள்ளஅறிக்கையில் கூறியிருப்பதாவது: முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒழுங்குமுறை ஆணையம் மின்கட்டணம் தொடர்பாக ஏதேனும் ஆணை வழங்கினாலும், அதனை நடைமுறைப்படுத்தும்போது வீட்டு மின் நுகர்வோர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம், எந்தவொரு மின் கட்டண உயர்வும் இருக்காது எனவும், தற்போது வழங்கப்படும் 100 யூனிட் இலவச மின்சாரம் உள்ளிட்ட அனைத்து சலுகைகளும் தொடர்ந்து வழங்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவிலில் வருஷாபிஷேக பூஜை இன்று தொடங்குகிறது

ஜூலை 2ந் தேதி சிறப்பு பூஜைகளைத் தொடர்ந்து புனிதநீரால் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடக்கிறது.

திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவிலில் 418 ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த 2022ம் ஆண்டு ஆனி மாதம் உத்தரம் நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடந்தது. இதனை கணக்கில் கொண்டு ஆனிமாத உத்திரம் நட்சத்திர நாளில் வருஷாபிஷேகம் நடைபெறும். அவ்வகையில் இந்த ஆண்டு ஜூலை 2ந் தேதி வருஷாபிஷேகம் நடைபெறுகிறது.



வருஷாபிஷேக பூஜைகள் நாளை (செவ்வாய்க்கிழமை) தொடங்குகிறது. நாளை மாலை 6.30 மணிக்கு ஆச்சார்ய வர்ணம், பிரசாத சுத்தி பூஜை, வாஸ்து ஹோமம், வாஸ்து கலசாபிஷேகம், அத்தாழ பூஜை நடக்கிறது. வருகிற 1ந் தேதி கணபதி ஹோமம், சுகிர்த ஹோமம், உச்ச பூஜை உதய மார்த்தாண்ட மண்டபத்தில் மண்டப சுத்தி, அத்தாழ ஸ்ரீ பலி போன்றவை நடைபெறும்.

2ந்தேதி அதிகாலை 5 மணிக்கு கோவில் நடை திறப்பை த்தொடர்ந்து நிர்மால்ய தரிசனம் நடைபெறும். அதனைத்தொடர்ந்து சுவாமி கருவறையில் இருந்து ஒற்றைக்கல் மண்டபத்தில் எழுந்தருளல், நவகலச அபிஷேகம், கணபதி ஹோமம், உதய மார்த்தாண்ட மண்டபத்தில் 25 கலசங்களுடன் சிறப்பு பூஜை நடக்கிறது. பின்னர் ஆதிகேசவ பெருமாள் மற்றும் பூதேவி ஸ்ரீதேவிக்கு 25 கலசங்களில் பூஜை செய்யப்பட்ட புனிதநீரால் சிறப்பு அபிஷேகம், கிருஷ்ண சாமி, அய்யப்ப சாமி, குலசேகரப்பெருமாள் ஆகியோருக்கு நவ கலச அபிஷேகம், தீபாராதனை நடக்கிறது. மதியம் சிறப்பு அன்னதானம் நடக்கிறது. மாலையில் அலங்கார தீபாராதனையைத் தொடர்ந்து கோவில் பிரகாரத்தில் உள்ள விளக்குகளுக்கு ஒளியேற்றும் லட்சதீப விழா நடக்கிறது.

# ரெயில் நிலையம் நடைமேடையில் இருந்து தவறி விழுந்தவரின் கால் துண்டானது

சாத்தூர் ரயில் நிலையத்தில் தூத்துக்குடி to ஓகா எக்ஸ்பிரஸ் வண்டியில் ஏறும்போது ஜோசப் A/56S/o குழந்தை வேலு திருத்தங்கள் விருதுநகர் சேர்ந்த நபர் நடைமேடையில்இருந்து தவறி விழுந்ததில் வலது கால் முழுவதும் தொடையில் இருந்து துண்டாக ஆகி விட்டது தற்போது தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக சாத்தூர் GH அனுப்பி வைக்கப்பட்டது சாத்தூர் அரசு



மருத்துவமனையில் முதலுதவி வழங்கி மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகிறார் மேற்படி நபர் மதுரை டு புனலூர் வண்டிக்கு செல்வதற்காக காத்திருந்தவர் மது போதையில் தூங்கியதாலும் மேற்படி வண்டியை தவற விட்டதாலும் தூத்துக்குடியில் இருந்து ஓகா செல்லும் விரைவு வண்டிக்கு ஓடி சென்று ஏறும்போது கை நழுவி உள்ளே விழுந்ததால் வலது கால் தொடையுடன் துண்டிக்கப்பட்டுள்ளது.

# மகளிர் உரிமைத்தொகை : தளர்வுகளை அறிவித்த தமிழக அரசு

சென்னை, ஜூலை 1

தமிழகத்தில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ந்தேதி அண்ணா பிறந்த நாளில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். தற்போதைய நிலையில் சுமார் 1 கோடியே 14 லட்சம் பெண்கள் மாதந்தோறும் கலைஞர் உரிமைத் தொகை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்காக மேலும் 3 தளர்வுகளை தமிழக அரசு அறிவித்து ,அதற்கான வழிகாட்டு நெறி முறைகளுடன் அரசாணை வெளியிட்டுள்ளது.



அதன்படி, காலமுறை ஊதியம் பெற்று, தற்போது ஓய்வூதியம் பெறுவோர் குடும்பங்களில் பெண்கள் விண்ணப்பிக்கலாம். அரசுத்துறைகளில் மானியம் பெற்று 4 சக்கர வாகனம் வைத்திருப்போர் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் தகுதியானவர்கள். விதவை ஓய்வூதியம் பெறுவோர் குடும்பங்களில் ஓய்வூதியதாரர் அல்லாத பெண்களும் விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துள்ளது.

# மேல்விஷாரம் இஸ்லாமிய ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி நிகழ்ச்சி

மேல்விஷாரம் இஸ்லாமிய ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மேல்விஷாரம் தி நேஷனல் வெல்பர் அசோசியேஷன் மற்றும் மேல்விஷாரம் ஜமியத் உலமா யூத் கிளப் இணைந்து நடத்திய போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி நிகழ்ச்சி இஸ்லாமிய ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அசோசியேஷன் தலைவர் ஆலிஜனாப் கே.முஹம்மத் அயூப் சாஹிப் தலைமையில் நடைபெற்றது. பள்ளியின் தலைமையாசிரியர் (பொறுப்பு) ஆலிஜனாப் அபுதாஹிர் கான் சாஹிப் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். சிறப்பு அழைப்பாளர்களாக மேல்விஷாரம் முஸ்லிம்கல்விச்சங்கதுணைத் தலைவர் மற்றும் மேல்விஷாரம் முஸ்லிம் கல்விச் சங்க பொதுப் பள்ளி தாளாளர் ஆலிஜனாப் S.Z.இப்திகார் அஹ்மத் சாஹிப் அவர்களும், ஆற்காடு நகர துணை காவல் ஆய்வாளர் திரு. அண்ணாமலை, ஆற்காடு நகர காவல்துறை அதிகாரிகள், கலந்து கொண்டனர். பள்ளியின் காலை வழிபாட்டின் போது ராணிப்பேட்டை மாவட்ட அரசு காஜி மௌலவி அப்துல் கரீம்



காஷீபிஅவர்கள்கலந்து கொண்டு மாணவர்களிடையே போதைப் பொருட்களால் உண்டாகும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகிகள் அனைவரும் போதைப் பொருட்களுக்கு எதிராக உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை காவல் ஆய்வாளர் திரு.அண்ணாமலை அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இஸ்லாமிய ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் இருந்துதுவங்கியபேரணி அண்ணாசாலை வழியாக புளியமரம் பேருந்து நிலையம் வரை நிறைவு பெற்றது. அப்போது ஆசிரியர்கள், காவல்துறை அதிகாரிகள், ஊடக நண்பர்கள், ஜமியத் உலமா நிர்வாகிகள், அசோசியேஷன் நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# இளைஞர் மரணம்: காவல்துறை சட்டத்தை தங்களது கைகளில் எடுக்கக்கூடாது எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஜூலை 1

எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"சிவகங்கை மாவட்டம் மடப்புரம் கோவில் காவலாளி அஜித் குமார் என்பவர் பெண் பக்தரின் காரில் இருந்த ஒன்பதரை பவுன் நகையை திருடி விட்டதாக வந்த புகாரை அடுத்து, திருபுவனம் காவல்துறை அஜித் குமாரை கைது செய்து விசாரணை செய்ததாகவும், அச்சமயத்தில் காவலரின் தாக்குதலால் அஜித் குமார் மரணம் அடைந்து விட்டதாகவும் அவரின் உறவினர்கள் இறந்த



அஜித் குமாரின் உடலை வாங்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

"ஜெய்பீம் படம் பார்த்தேன். உள்ளம் உலுக்கியது" என சினிமா ரிவிவ் எழுதிய அரசின் முதலமைச்சர் எங்கே இருக்கிறார்? விக்னேஷ் லாக்கப் மரணத்தின் போது, சட்டப்பேரவையிலேயே பச்சைப்பொய் பேசியவர் தானே நீங்கள்? இதற்கும் அதே போல் பொய் தான் பதிலாக வருமா?

தவறு செய்ததாக காவல் துறை கருதினால், கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்து, உரிய சட்ட நெறிமுறையை பின்பற்ற வேண்டுமே தவிர, சட்டத்தை தங்கள் கைகளில் முழுமையாக காவல் துறை எடுத்துக்கொள்ள கூடாது. தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள காவல்துறையைக் கூட நிர்வகிக்கத் தெரியாத முதல்வருக்கு எனது கடும் கண்டனம்.

திருபுவனம் காவல் நிலையத்தில் திருக்கோவில் காவலாளி அஜித் குமார் மரணம் அடைந்த நிகழ்வு குறித்து முழு உண்மையை வெளி கொண்டுவர உடனடியாக மாவட்ட நீதிபதி தலைமையில் குழு அமைத்து, முழு விசாரணை நடத்தி, இந்த மரணத்திற்கு காரணமானவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும், மேலும் இறந்தவர் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க திமுக ஸ்டாலின் மாடல் அரசை வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்அமைச்சர் தன் ஆட்சியில் தொடரும் காவல் மரணங்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்? டி.டி.வி. தினகரன் தாக்கு

சென்னை ஜூலை 1

முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் தன் ஆட்சியில் சாமானிய மக்களின் மீது காவல்துறையின் மூலம் மனிதாபிமானமற்ற முறையில் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார் ? என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் காவலர்கள் தாக்கியதில் உயிரிழந்திருப்பதாக நாளிதழ்களிலும் ஊடகங்களிலும் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்கி, அவர்களின் புகார்களுக்கு தீர்வு காண வேண்டிய காவல் துறை, விசாரணை எனும் பெயரில் கண்ணியமற்ற முறையிலும், காட்டுமிராண்டித்தனமாகவும் நடந்து கொள்வதே காவல் மரணங்களுக்கு அடிப்படை காரணம் என்றபுகார்எழுந்துள்ளது.

காவல் நிலைய மரணங்கள் தொடர்பான திரைப் படங்களை பார்த்து போலிக் கண்ணீர் வடிக்கும் முதல்அமைச்சர், தன்



ஆட்சியில் சாமானிய மக்களின் மீது காவல்துறையின் மூலம் மனிதாபிமானமற்ற முறையில் கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகளுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார் ?

ஒருவரை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் காவல்துறையினருக்கு இல்லை என்றாலும், காவலர்கள் பற்றாக்குறை, அளவுக்கு அதிகமான பணிச்சுமை, தீராத மன அழுத்தம் ஆகியவை காவலர்களுக்கு உட்பட்ட அதிகாரத்தை மீறுவதற்கு காரணமாக அமைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

எனவே, காவல்நிலைய மரணங்களே இல்லை என்ற நிலையை அடைய வேண்டும் என மேடையில் பேசுவதோடு தன் கடமை நிறைவடைந்து விட்டதாக கருதாமல் அதனை செயல்பாட்டிற்கு கொண்டுவருவதற்கான காவல்துறை சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# இளைஞர் மரணம்: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதவி விலக வேண்டும் அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஜூலை 1

பா.ம.க. தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் காவல்நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அஜித்குமார் என்ற இளைஞர் காவலர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. மனித உரிமைகளை சிறிதும் மதிக்காமல் ஸ்டாலின் காவல்துறை இளைஞரைஅடித்தே கொலை செய்திருப்பது கடுமையாக கண்டிக்கத்தக்கது. திருப்புவனத்தை அடுத்த மடப்புரம் கிராமத்தில் உள்ள கோவிலுக்கு வந்த மருத்துவர் ஒருவர், அவரது மகிழுந்தில் வைத்திருந்த 10 சவரன் தங்க நகைகளை காணவில்லை என்று அளித்த புகாரின் அடிப்படையில், அவரது மகிழுந்தை நிறுத்துவதற்கு உதவி செய்த கோவிலின்



தற்காலிக ஊழியர் அஜித்குமார் என்பவரை காவல்துறையினர் அழைத்துச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர். அப்போது அவர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கியதில் இளைஞர் அஜித்குமார் உயிரிழந்து விட்டார். அவரது உயிரிழப்புக்குக் காரணமான காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி அங்குள்ள மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும்? என்பதற்கான விதிகளை உச்சநீதிமன்றம் வகுத்துள்ள நிலையில், அவற்றை மதிக்காத காவல்துறையினர் அஜித்குமாரை கொடூரமாகத் தாக்கி படுகொலை செய்துள்ளனர். தமிழகம் மட்டுமின்றி, ஒட்டுமொத்த இந்தியாவையும் உலுக்கிய சாத்தான்குளம் காவல்நிலையப் படுகொலைகள் எவ்வாறு நடந்தனவோ, அதற்கு சற்றும் குறைவில்லாத வகையில் அஜித்குமார் கொல்லப்பட்டுள்ளார். இதற்காக தமிழக காவல்துறையும், அதற்கு பொறுப்பு வகிக்கும் முதல் அமைச்சரும் தலைகுனிய வேண்டும். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் படுதோல்வி அடைந்து விட்ட காவல் துறை அப்பாவிகளை விசாரணைக்கு அழைத்துச் சென்று படுகொலை செய்வதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த 4 ஆண்டுகளில் 28 பேர் காவல்நிலையங்களில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர். இதைவிட கொடுமையான மனித உரிமை மீறல்கள் இருக்க முடியாது. சாத்தான்குளத்தில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்ட போது,''பேய் ஆட்சி செய்தால் பிணந்திண்ணும் சாத்திரங்கள் என்பதை இந்த படுகொலைகள் நினைவுபடுத்துகின்றன. இதற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் உடனடியாக பதவி விலக வேண்டும்'' என்று வலியுறுத்தியிருந்தார். முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மனசாட்சி இருந்தால், 5 ஆண்டுகளுக்கு வலியுறுத்தியதைப் போல இப்போது பதவி விலக வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஏலகிரி மலையில் 7 ஆண்டுகளுக்கு பிறகு கோடை விழா கொண்டாட்டம்

திருப்பத்தூர், ஜூலை 1

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலை 'ஏழைகளின் ஊட்டி' என்று அழைக்கப்படுகிறது. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 1,200 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள ஏலகிரியின் மொத்த பரப்பளவு 30 சதுர கி.மீ. ஆகும். இங்கு இயற்கைப் பூங்கா, முருகன் கோவில், தொலைநோக்கி இல்லம், நிலாவூர் ஏரி மற்றும் பூங்கா, ஆஞ்சநேயர் கோவில், மங்கலம் தாமரைக்குளம், படகு குழாம் போன்ற இடங்கள் ஏலகிரி மலையில் சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த இடமாகும்.

எப்பொழுதும் ஒரே சீதோஷ்ண நிலை இருப்பதால் தமிழகம் மட்டுமின்றி



கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் ஏலகிரி மலைக்கு வருகை தருகின்றனர். கோடை காலங்களில் ஏலகிரி மலையில் கோடை விழா சிறப்பாக கொண்டாடப்படும். ஆனால் கடந்த 2018ம் ஆண்டுக்கு பிறகு ஏலகிரி மலையில் கோடை விழா கொண்டாடப்படவில்லை. இந்த நிலையில், ஏலகிரி மலையில் சுமார் 7 ஆண்டுகளுக்கு பிறகு இன்று கோடை விழா கொண்டாடப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா துறை இணைந்து மேற்கொண்டுள்ளது. இந்த விழாவை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ .வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்த விழாவில் இசை நிகழ்ச்சிகள், பாரம்பரிய மற்றும் நவீன நடனங்கள், கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மேலும் சுற்றுலா குறித்த கண்காட்சி, உள்ளூர் கைவினைப்பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனை நடைபெற்றது. இருப்பினும், 7 நாட்கள் நடத்தப்படும் கோடை விழா, மழை காரணமாக இன்று ஒருநாள் மட்டுமே நடத்தப்படுவதால் சுற்றுலா பயணிகளின் வருகை சற்று குறைந்து காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# நயினார் நாகேந்திரன் பா.ஜ.க. தலைவராவதற்கு முன் எங்களிடம் என்ன பேசினார் தெரியுமா ? கே.என்.நேரு

நெல்லை, ஜூலை 1

நெல்லையில் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதவாது,

தி.மு.க.வை ஆட்சியில் இருந்து அகற்றுவேன் என சொல்லித்தான் நயினார் நாகேந்திரன் மாநில தலைவராகி உள்ளார். அவர் தலைவராக வருவதற்கு முன் எங்களிடம் என்ன பேசினார் என்பதை பொது வெளியில் சொல்ல முடியாது. அவர்கள் முதலில் அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணிக்குள் இருக்கும் பிரச்சனையை சரி செய்து விட்டு கூட்டணி ஆட்சியா? தனித்து ஆட்சி அமைப்பார்களா? என்பதை முடிவு செய்து விட்டு எங்களை பற்றி பேசட்டும்.



வருகிற 8ந்தேதி நடைபெறும் நெல்லையப்பர் கோவில் தேரோட்டத்திற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிதலமடைந்த சாலைகளை செப்பனிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிறப்பான முறையில் இந்த ஆண்டு தேரோட்டம் நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# திற்பரப்பு அருவியில் ஆர்ப்பரித்துக் கொட்டும் தண்ணீர்

கன்னியாகுமரி, ஜூலை 1

கன்னியாகுமரி மாவட்டத்தில் குமரியின் குற்றாலம் என்று அழைக்கப்படும் திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்துகொட்டுவதால்அருவியில்குளிக்கஏராளமான சுற்றுலா பயணிகள் திற்பரப்புக்கு வருவது வழக்கம். தற்போது, மலையோர பகுதிகளில் விட்டு விட்டு மழை பெய்து வருவதால் அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால் அருவியில் முதல் இரண்டு பகுதிகளில் சுற்றுலாபயணிகள்குளிக்கதிற்பரப்பு பேரூராட்சிநிர்வாகம் அனுமதி வழங்கி உள்ளது. இந்நிலையில், வார விடுமுறையை முன்னிட்டு திற்பரப்பு அருவிக்கு பல்வேறு மாவட்டங்கள், மாநிலங்களில் இருந்து ஏராளமானசுற்றுலா பயணிகள்தங்கள் குடும்பத்தாருடன் இன்று காலை முதலே அதிகளவில் திற்பரப்பு அருவிக்கு வந்தனர். அவர்கள் நீண்ட வரிசையில் காத்துநின்று அருவியில் ஆர்ப்பரித்து கொட்டும் தண்ணீரில் தங்களது குடும்பத்தினருடன் சேர்ந்து உற்சாகமாக குளியலிட்டும். அருவியின் அழகை ரசித்து செல்கின்றனர். மேலும், சிறுவர்கள் அங்குள்ள நீச்சல் குளத்தில் குளித்து நீண்ட நேரம் விளையாடி செல்கின்றனர். வார விடுமுறை என்பதால் திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதி காணப்படுகிறது. இதனால், அசம்பாவிதங்களை தவிர்க்க மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில்தனிப்படை போலீசார் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

1.7.2025

# கடந்த 4 ஆண்டுகளில் 30க்கும் மேற்பட்ட காவல்துறை விசாரணை மரணங்கள் சீமான் கண்டனம்

சென்னை ஜூலை 1

விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இளைஞரின் மரணத்திற்கு காரணமான காவல்துறையினர் மீது கொலைவழக்கு பதிவு செய்து கைது செய்ய வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சிவகங்கை மாவட்டம், திருபுவனம் அருகேயுள்ள மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவிலில் காவலாளியாக தற்காலிகமாகப் பணியாற்றி வந்த தம்பி அஜித், பக்தர் ஒருவரின் தங்கநகையைத் திருடிவிட்டதாக அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், திருபுவனம் காவல்துறையினரால் விசாரணைக்கு அழைத்துச்செல்லப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளது பெரும் அதிர்ச்சியும், மிகுந்த மனவேதனையும் அளிக்கிறது.

திருபுவனம் காவல்துறையினர் கடுமையாகத் தாக்கியதால் நிகழ்ந்துள்ள இப்படுகொலை வன்மையான கண்டனத்துக்குரியது. விசாரணை என்ற பெயரில் காவல்துறையினர் கடுமையாகத் தாக்கியதாலேயே தம்பி அஜித் உயிரிழந்ததாகக் கூறி, படுகொலைக்கு நீதி வேண்டி அவருடைய உறவினர்கள் போராட்டம் நடத்தி வந்த நிலையில், திருபுவனம் காவல்நிலையத்தில் பணியாற்றிய ஆறு தனிப்படை காவலர்களை சிவகங்கை மாவட்ட காவல்துறை கண்காளிப்பாளர் பணியிடை நீக்கம் செய்துள்ளார். காவல்துறை விசாரணையில் நடைபெற்ற படுகொலைக்கு பணியிடை நீக்கம் செய்வது மட்டும்தான் தண்டனையா? பணிநீக்கம் மட்டுமே படுகொலை செய்யப்பட்ட அஜித் மரணத்திற்கான நீதியா? பாதிக்கப்பட்ட அவர் குடும்பத்திற்கானதுயர்துடைப்பா?

திருட்டு புகாருக்காக தம்பி அஜித்தைக்கடுமையாகத் தாக்கி விசாரித்த தமிழ்நாடு காவல்துறை, தம்பி அஜித்தின் மரணத்திற்குக் காரணமான காவலர்கள் மீது கொலை வழக்கு பதியாதது ஏன்? அவர்களைக் கைது செய்து உரிய விசாரணை நடத்தாதது ஏன்? தி.மு.க. ஆட்சியில் பாமர மக்களுக்கு ஒரு நீதி? அதிகாரம் படைத்தவர்களுக்கு வேறு நீதியா? இதுதான் திராவிட மாடல் கட்டிக் காக்கும் சமூக நீதியா?

தி.மு.க. ஆட்சியில் காவல்துறை விசாரணையின்போது குரலற்ற எளிய மக்கள் கொல்லப்படும் நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவது கொடுங்கோன்மையின் உச்சமாகும். கடந்த 4 ஆண்டுகளில் 30க்கும் மேற்பட்ட காவல்துறை விசாரணை மரணங்கள் நடைபெற்றுள்ள நிலையில் அம்மரணங்களுக்கு உரிய நீதி இதுவரை கிடைத்தப்பாடில்லை.

சமத்துவம், சமூகநீதி, திராவிட மாடல் என்றெல்லாம் கூறிவிட்டு, அடிப்படை மனித உரிமையைக் கூடக் காத்திட முடியாதஅரசாகதி.மு.க. அரசு விளங்குவது வெட்கக்கேடானது. தமிழ்நாடு முதல் அமைச்சர் ஸ்டாலின்காவல்நிலைய மரணங்களைத் தடுக்க, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுவது போல் வெளியிட்ட அறிவிப்புகள் யாவும், வழக்கம்போல் வெற்று விளம்பர அரசியல் நாடகம் மட்டும்தான் என்பதை, தம்பி அஜித்தின் படுகொலை மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

ஆகவே, தமிழ்நாடு அரசு சிவகங்கை மாவட்டம், மடப்புரத்தைச் சேர்ந்த தம்பி அஜித்தை கடுமையாகத் தாக்கி அவரது மரணத்திற்கு காரணமான திருபுவனம் காவலர்கள்மீது உடனடியாகக் கொலை வழக்கு பதிவே தாடு, குற்றப்புலனாய்வுத்துறை விசாரணைக்கு உத்தரவிட்டு, எவ்வித அதிகாரக் குறுக்கீடுமற்ற நியாயமான நீதி விசாரணை நடைபெறுவதை உறுதிசெய்து, அவரது உயிரிழப்புக்குக் காரணமான காவலர்கள் அனைவருக்கும் சட்டப்படி கடும் தண்டனைப் பெற்றுத்தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதோடு, தம்பி அஜித் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும், உரிய துயர்துடைப்பு நிதியும் வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நீலகிரி: கோத்தகிரியில் உலா வந்த கரடியால் மக்கள் அச்சம்



நீலகிரி, ஜூலை 1

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி காம்பாய் கடை பகுதியில் 200க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதியில் கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் கரடி உலா வந்த வண்ணம் உள்ளது. இதனால் இரவு நேரத்தில் பணிக்கு சென்று வீடு திரும்பும் தொழிலாளர்கள் அச்சமடைந்து உள்ளனர்.

எனவே, கரடியின் நடமாட்டத்தை கண்காணித்து அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்டவோ அல்லது கூண்டு வைத்து பிடித்து வனப்பகுதியில் கொண்டு சென்று விடவோ வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# சென்னை ஐதராபாத் விமானத்தில் இயந்திரக்கோளாறு நடுவானில் பரபரப்பு

சென்னை, ஜூலை 1

சென்னை விமான் நிலையத்தில் இருந்து தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்திற்கு இன்று மாலை இண்டிகோ நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் ஒன்று கிளம்பியது. இந்த விமானத்தில் 159 பயணிகள், 6 ஊழியர்கள் பயணித்தனர்.

இந்த நிலையில் விமானம்அ நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது, இயந்திரக்கோளாறுஏற்பட்டது தெரியவந்தது. இதனை அறிந்த பயணிகள் பெரும் அச்சத்திற்கு உள்ளாகினர். இதனையடுத்து அந்த விமானத்தை விமானி, மீண்டும் சென்னைக்கே திருப்பினார்.

விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. சென்னையில் பயணிகளுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதுடன், மாற்று விமானத்தில் அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடுவானில் விமானத்தில் இயந்திரக்கோளாறு ஏற்பட்ட சம்பவம் பயணிகளிடையேபெரும்பரபரப்பைஏற்படுத்தியது.

# இன்றைய ராசி பலன்கள் (1.7.2025)

**மேஷம்:** வேலைப்பளு அதிகமாகும். குடும்பத்தில் ஒருவரால் சிறு மனமுடைவு ஏற்படும். பயணங்களில் எச்சரிக்கை தேவை.

**ரிஷபம்:** தெய்வ சக்தி உங்களை ஆதரிக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல செய்தி ஒன்று வரக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். பண விஷயங்களில் கவனம் தேவை. பொறுமையாக செயல்பட வேண்டிய நாள். பரிகாரம்:துர்கையைவழிபடுதல்.

**கடகம்:** வீட்டில் நிம்மதியான சூழ்நிலை. உறவினர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் லாபம் கூடும். பரிகாரம்: சந்திரன் வழிபாடு.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். புது பொறுப்புகள் வரும். குடும்பத்தில் நற்செய்தி. பரிகாரம்: சூரியனை நமஸ்காரம் செய்க.

**கன்னி:** வேலை வாய்ப்பு கிடைக்கும். நண்பர்களால் ஆதரவு. உடல் ஆரோக்கியத்தில் சிறிய கவலை. பரிகாரம்: துலசி மாலை சாற்றி ஜபிக்கவும்.

**துலாம்:** பழைய பிரச்சனைக்கு தீர்வு. செலவுகள் கட்டுப்படுகின்றன. மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். பரிகாரம்: லக்ஷ்மி வழிபாடு.

**விருச்சிகம்:** சாமர்த்தியமாக நடந்தால் வெற்றி உண்டு. தொழிலில் வளர்ச்சி. முக்கிய முடிவுகளை தவிர்க்கவும். பரிகாரம்: சுப்ரமணிய சுவாமிக்கு பால் அபிஷேகம்

**தனுசு:** ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகள் பற்றி சந்தோஷம். ஆன்மிகத்தில் ஈடுபாடு வரும். பரிகாரம்: விஷ்ணு சஹஸ்ரநாமம்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்கள் நிறைவேறும். நண்பர்களுடன் சந்திப்பு. பயணங்கள் சாதகமாக அமையும். பரிகாரம்: சனி பகவானுக்கு எண்ணெய் தீபம்.

**கும்பம்:** எதிர்பாராத வருமானம் கிடைக்கும். வாக்குவாதம் தவிர்க்கவும். அலுவலகத்தில் சிறு பிரச்சனைகள்.

**மீனம்:** மனநிம்மதி அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம். நிதி நிலை மேம்படும். பரிகாரம்: தக்ஷிணாமூர்த்தி வழிபாடு.

# மேட்டூர் அணை 120 அடி என்ற முழு கொள்ளளவை எட்டியது; விவசாயிகள் மகிழ்ச்சி

சேலம், ஜூலை 1

கேரளாவில் 16 ஆண்டுகளில் இல்லாத வகையில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை முன்பே பெய்ய தொடங்கியது. இதேபோன்று கர்நாடகாவிலும் தொடர் பருவமழை பெய்து வருகிறது. இதனால், கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகள் நிரம்பின.

இதனை அடுத்து பாதுகாப்பு கருதி அந்த அணைகளில் இருந்து உபரிநீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இந்த தண்ணீர் ஒகேனக்கல் வழியாக மேட்டூர் அணைக்கு வந்து சேர்கிறது. குறிப்பாக நேற்று முன்தினம் வினாடிக்கு 60 ஆயிரத்து 740 கனஅடி வீதம் நீர்வரத்து காணப்பட்டது. இந்த நீர்வரத்தானது நேற்று மாலையில் வினாடிக்கு 80 ஆயிரத்து 984 கனஅடியாக அதிகரித்தது. இதனால் அணை நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது.

120 அடி உயர மேட்டூர் அணையின் நீர் மட்டம் நேற்று பகலில் 117 அடிக்கு மேல் உயர்ந்தது. நேற்று இரவு 118 அடியை எட்டியது. அதே நேரத்தில் காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 22 ஆயிரத்து 500 கனஅடியில் இருந்து வினாடிக்கு 26 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

இந்ததண்ணீரானது, அணையையொட்டி அமைந்துள்ள நீர்மின் நிலையங்கள் வழியாக வினாடிக்கு 22 ஆயிரத்து 500 கனஅடி வீதமும், அணையின் மேல்மட்ட மதகுகள் வழியாக வினாடிக்கு 3 ஆயிரத்து 500 கன அடி வீதமும் திறந்து விடப்பட்டது. அப்போது அணையின் நீர் இருப்பு 88.59 டி.எம்.சி.யாக (ஒரு டி.எம்.சி. என்பது நூறு கோடி கனஅடி) இருந்தது. இதனால், 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. இதனால், கரையோரபகுதிகளில்கண்காணிப்புபலப்படுத்தப்பட்டு உள்ளது. கரையோர பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. அணையில் இருந்து ஜூன் 12ல் காவிரி படுகை பாசனத்திற்காக நீர் வெளியேற்றப்பட்டு இருந்தது. இந்நிலையில், 68 ஆண்டுகள் கழித்து ஜூன் மாதத்தில் 2வது முறையாக முழு கொள்ளளவை அணை எட்டியுள்ளது. அணை முழு கொள்ளளவை எட்டுவது இது 44வது முறையாகும். இதனையடுத்து, அணை நீர் பாய்ந்து செல்லும் பகுதிகளை ஒட்டிய கரையோர பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களிடம், பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்லும் படி தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

# ஹரிஷ் கல்யாண் பிறந்த நாள்.. 'டீசல்' படக்குழு வெளியிட்ட சிறப்பு போஸ்டர்



'பார்க்கிங்', 'லப்பர் பந்து' என தனது அடுத்தடுத்த ஹிட் படங்கள் மூலம் தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத முன்னணி நடிகர்களில் ஒருவராக ஹரிஷ் கல்யாண் உள்ளார். இவர் சண்முகம் முத்துசாமி இயக்கத்தில் 'டீசல்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் கதாநாயகியாக அதுல்யா ரவி நடிக்க வினய் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

எஸ்.பி சினிமாஸ் என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்துக்கு திபு நினன் தாமஸ் இசையமைக்கிறார். விறுவிறுப்பாக நடைபெற்று வரும் இந்த படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளது. இந்த படம் ஹரிஷ் கல்யாண் கரியரில் அதிக பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட படமாகும். இப்படத்தின் டீசர் விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், நடிகர் ஹரிஷ் கல்யாண் தன்னுடைய பிறந்த நாளை கொண்டாடி வருகிறார். இந்த நிலையில் அவரது பிறந்தநாளை ஒட்டி 'டீசல்' படக்குழு சிறப்பு போஸ்டரை வெளியிட்டு அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளது.

# விஜய் சேதுபதியின் தலைவன் தலைவி பட ரிலீஸ் தேதி அறிவிப்பு



இயக்குநர் பாண்டிராஜ் இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிப்பில் புதிய படம் உருவாகி உள்ள படம் 'தலைவன் தலைவி'. இது விஜய் சேதுபதியின் 52வது படமாகும். சத்ய ஜோதி பிலிம்ஸ்தயாரித்துள்ளஇந்தபடத்தில்நித்யாமேனன், யோகிபாபுமுக்கியகதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

குடும்பப் பின்னணியைக் கதையாக வைத்து உருவாகியுள்ள இந்த படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடைந்தது. விஜய் சேதுபதி பாண்டிராஜ் இருவரும் முதல் முறையாக இணைந்துள்ளதால் இந்த படத்துக்கு ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்த படத்தில் விஜய் சேதுபதி புரோட்டா மாஸ்டராக நடித்துள்ளதாக சொல்லப்படுகிறது. இப்படத்தின் டைட்டில் டீசர் சமீபத்தில் வெளியானது.

சமீபத்தில் இந்த படத்திலிருந்து 'பொட்டல முட்டாயே' பாடல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், 'தலைவன் தலைவி' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இப்படம் ஜூலை 25ம் தேதி வெளியாக உள்ளது.

# சீஷெல்ஸ் நாட்டிற்கு சுற்றுலா சென்ற சூர்யா ஜோதிகா



சூர்யா ஜோதிகா 1999ம் ஆண்டு வெளியான 'பூவெல்லாம் கேட்டுப்பார்' திரைப்பத்தில் முதன் முதலாக இணைந்து நடித்தனர். அதை தொடர்ந்து இந்த ஜோடி உயிரிலே கலந்தது, பேரழகன், காக்க காக்க, சில்லுனு ஒரு காதல், மாயாவி உள்ளிட்ட திரைப்படங்களை ஒன்றாக இணைந்து நடித்தனர்.

இதனையடுத்து சூர்யா ஜோதிகா இருவரும் 2006ம் ஆண்டு இருவீட்டாரின் சம்மதத்தோடு திருமணம் செய்து கொண்டனர். நட்சத்திர காதல் தம்பதிகளான சூர்யா ஜோதிகா தற்போது மும்பையில் குடும்பத்துடன் வசித்து வருகின்றனர். சினிமாவைக் கடந்து தனிப்பட்ட வாழ்விலும் இந்த இணை பலருக்கும் முன்மாதிரியாக இருக்கின்றனர். குறிப்பாக, சூர்யா ரசிகர்களுக்கு..ரெட்ரோ வெற்றியைத் தொடர்ந்து சூர்யா, வெங்கட் அட்லூரி இயக்கத்தில் நடித்து வருகிறார். .இந்த நிலையில், படப்பிடிப்புக்குச் செல்வதற்கு முன் சூர்யா தன் மனைவி ஜோதிகாவுடன் கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள சீஷெல்ஸ் நாட்டிற்குச் சுற்றுலா சென்றுள்ளார். அங்கு இருவரும் மகிழ்ச்சியாக பயணம் செய்ததை, "நீயும் நானும் சொர்க்கத்தில்.." என ஜோதிகா வீடியோ வெளியிட்டு தெரிவித்துள்ளார். இந்த வீடியோவை பார்த்த ரசிகர்கள் மகிழ்ச்சியாக கமெண்ட் செய்து வருவதுடன் வாழ்ந்தால் இவர்களைப்போல் இணை பிரியாமல் வாழ வேண்டும் என தங்கள் விருப்பங்களையும் தெரிவித்து வருகின்றனர்.

# "கண்ணப்பா" பட வசூல் இத்தனை கோடியா?

தெலுங்கில் வரலாற்று புதினத்தை தழுவி உருவாகி இருக்கும் ஆன்மிக திரைப்படம் 'கண்ணப்பா'. மிகவும் பிரபலமான மகாபாரதம் தொடரை இயக்கிய பாலிவுட் இயக்குனர் முகேஷ் குமார் சிங் இத்திரைப்படத்தை இயக்கி இருக்கிறார். வரலாற்று பின்னணியில் கடவுள் சிவனை வழிபடும் அவரது தீவிர பக்தன் கண்ணப்பரை பற்றிய கதையை தழுவி இப்படம் உருவாகி இருக்கிறது.

இத்திரைப்படத்தில் பிரபல தெலுங்கு நடிகர் விஷ்ணு மஞ்சு கண்ணப்பர் வேடத்தில் நடித்துள்ளார். மேலும், மோகன்லால், பிரபாஸ், காஜல் அகர்வால், அக்சய் குமார், பிரீத்தி முகுந்தன், மோகன்பாபு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இப்படம் உலகம் முழுவதும் கடந்த 27ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. தெலுங்கு, ஹிந்தி, தமிழ், மலையாளம் எனப் பல மொழிகளிலும் பான்இந்தியா திரைப்படமாக கண்ணப்பா உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 'கண்ணப்பா' திரைப்படம் வெளியான 2 நாட்களில் ரூ. 16 கோடி வசூலித்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. எனினும், வசூல் குறித்த அதிகாரபூர்வ தகவல் படத் தயாரிப்பு நிறுவனத்திலிருந்து இன்னும் வெளியிடப்படவில்லை

# இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் எது நடந்தாலும் சுப்மன் கில்லை.. இந்திய முன்னாள் வீரர் ஆதரவு



சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்றது. இந்த போட்டியில் இந்தியா நிர்ணயித்த 371 ரன்கள் இலக்கை இங்கிலாந்து அணி எட்டிப்பிடித்து அசத்தியது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது போட்டி ஜூலை 2ம் தேதி பர்மிங்காமில் நடைபெற உள்ளது.

இந்த தொடருக்கு முன்னதாக ரோகித் சர்மா ஓய்வு பெற்றதால் இந்திய டெஸ்ட் அணியின் புதிய கேப்டனாக சுப்மன் கில் நியமிக்கப்பட்டார். இதற்கு பல முன்னாள் வீரர்கள் அதிருப்தி தெரிவித்திருந்தனர்.

இருப்பினும்அதனைநினைத்துஎந்தகவலையும்கொள்ளாதசுப்மன்கில்கேப்டனானமுதல்போட்டியிலேயே சதமடித்து அசத்தினார். ஆனாலும் தனது கேப்டன்சி பயணத்தை தோல்வியுடன் தொடங்கியுள்ளார்.

இந்நிலையில் ஒருவேளை இங்கிலாந்து தொடரில் தோல்வியை சந்தித்தாலும் சுப்மன் கில்லை கேப்டன்ஷிப் பதவியிலிருந்து நீக்கக்கூடாது என இந்திய முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி ஆதரவு தெரிவித்துள்ளார். இங்கிருந்து அவருக்கு குறைந்தது 3 வருடங்கள் கேப்டனாக செயல்படும் வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும் என்றும் சாஸ்திரி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "சுப்மன் கில்லுக்கு வாய்ப்புகள் கிடைக்காமல் போனால் நான் ஏமாற்றமடைவேன். பேட்டிங் செய்யும்போது அவருக்கு ஒரு ராஜரீக குணம் இருக்கும். சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் தன்னை மாற்றியமைத்துக் கொள்ளும் முறையை கற்றுக்கொள்ள முடிந்தால் அவருடைய பெயரும் பெரிதாக வருவதைப் பார்க்க முடியும். தற்போது நிறைய முதிர்ச்சியைப் பெற்றுள்ள அவர் ஊடகங்களை சிறப்பாக கையாண்டு டாஸ் வீசும் போதும் நன்றாக பேசுகிறார்.

அவரை 3 வருடங்கள் கேப்டனாக இருக்க விடுங்கள். இந்தத் தொடரில் எது நடந்தாலும் தேவையின்றி மாற்றங்கள் செய்யாதீர்கள். அவருக்கு 3 வருடங்கள் வாய்ப்பு கொடுங்கள். அதைச் செய்தால் அவரால் தொடர் வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று நம்புகிறேன்" என கூறினார்.

# மல்லோர்கா ஓபன் டென்னிஸ்: கிரீக்ஸ்பூர் சாம்பியன்

பல முன்னணி வீரர்கள் பங்கேற்றிருந்த மல்லோர்கா ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் கிரீக்ஸ்பூர் (நெதர்லாந்து), கோரன்டின் மவுடெட் (பிரெஞ்சு) ஆகியோர் மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த மோதலில் கிரீக்ஸ்பூர் 75 மற்றும் 76 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

# டெஸ்ட் கிரிக்கெட்: ஆகாஷ் சோப்ரா தேர்வு செய்த ஆல் டைம் சிறந்த இந்திய அணி.. யாருக்கெல்லாம் இடம்..?



நூற்றாண்டை தாண்டி நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக விளையாடிய வீரர்களை கொண்டு சிறந்த அணியை பல முன்னாள் வீரர்களும், கிரிக்கெட் வல்லுநர்களும் தேர்வு செய்து அறிவிப்பது வழக்கம்.

அந்த வரிசையில் இந்திய முன்னாள் வீரரான ஆகாஷ் சோப்ரா டெஸ்ட் போட்டிகளில் அசத்திய இந்திய வீரர்களை கொண்டு ஆல்டைம் சிறந்த இந்திய அணியை தேர்வு செய்துள்ளார்.

ஆகாஷ் சோப்ரா தேர்வு செய்த அணியில் சச்சின், ராகுல் டிராவிட், சேவாக், கவாஸ்கர் போன்ற முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். ஆனால் அந்த அணியில் முன்னாள் கேப்டன்களான மகேந்திரசிங் தோனி மற்றும்ரோகித்சர்மாவைஅவர்தேர்வுசெய்யவில்லை.

ஆகாஷ் சோப்ரா தேர்வு செய்த அணி விவரம் பின்வருமாறு:

1. சுனில் கவாஸ்கர் 2. வீரேந்திர சேவாக் 3.ராகுல் டிராவிட் 4. சச்சின் தெண்டுல்கர் 5. விராட் கோலி 6. ரிஷப் பண்ட் 7. கபில் தேவ் 8. ரவிச்சந்திரன் அஸ்வின் 9. அனில் கும்ப்ளே 10. ஜஸ்பிரித் பும்ரா 11. ஜாகீர் கான்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.